


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 5 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், சர்வதேச ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மகேஷ் பசுபதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மகேஷ் பசுபதி அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



நேற்று (09.08.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டடத்தின் முகப்பில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியை முன்னிட்டு ஹாக்கி போட்டிகள் தொடர்பான ஒலி, ஒளி காட்சியினை பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, திரு. இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, ஹாக்கி இந்தியா பொதுச் செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர்மனோகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாகர்கோயில்: மாற்று கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்

*கன்னியாகுமரி, ஆக. 10-* நாகர்கோவில் மாநகர தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஷாக் மோகன் ஏற்பாட்டில் நாகர்கோவில் மாநகராட்சி 27வது வார்டு பகுதியைச் சேர்ந்த மாற்றுக்கட்சியினர் விஷ்ணு, விஷால், மது உள்பட 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சால்வை அணிவித்து கழகத்தில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த இளைஞர்களுக்கு நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேசுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன், துணை அமைப்பாளர் சரவணன், பகுதிச் செயலாளர் துரை மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி. சுரேஷ், துணை அமைப்பாளர்கள் அருள் செல்வின், அகமதுஷா, முத்துக்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.8.2023) முகாம் அலுவலகத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் சந்தித்து, திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

### தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக

# ஹஜ் செல்லும் 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070 நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 10 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 5 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் பலனாக, இந்த ஆண்டு ஹஜ் பயணத்திற்கு சென்னை புறப்பாட்டுத் தளமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டு பயணிகள் சென்னையிலிருந்து ஹஜ் பயணம் மேற்கொண்டு, தங்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றி தாயகம் திரும்பியுள்ளனர். தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு அரசு ஹஜ் மானியம் வழங்கி வருகிறது. அதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,070/வீதம் 3,987 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 5 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று தலா ரூ.25,070/க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட மசோதாவுக்கு எதிராக தி.மு.க. வாக்களிப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கெஜ்ரிவால் நன்றி!

### அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகக் கடிதம்!

*புதுடெல்லி, ஆக.10-* நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு கொண்டுவந்த டெல்லி நிர்வாக மசோதாவை எதிர்த்து தி.மு.க. வாக்களித்தமைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.



தலைநகர் டெல்லியை ஒரு மாநகராட்சியைப்போல் தரம் குறைக்கும் வகையில், மாநிலங்களவையில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட டெல்லி சேவைகள் சட்ட (திருத்த) மசோதாவினை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் எதிர்த்ததைத் தொடர்ந்து, அதற்கு நன்றி தெரிவித்து டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (8.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.

டெல்லி முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், ஒன்றிய அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட (திருத்த) மசோதா, 2023ஐ எதிர்த்து வாக்களித்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, 2 கோடி டெல்லி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் டெல்லி மக்களின் உரிமைகளுக்காகப் போராடியதற்காக மனமார்ந்த பாராட்டுக்களைப் பதிவு செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்பின் கொள்கைகள் மீது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை பல்லாண்டுகளுக்கு நினைவு கூரப்படும் என்று தெரிவித்துள்ள டெல்லி முதலமைச்சர் அவர்கள், அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் இதுவரை 1.48 கோடி விண்ணப்பங்கள்

# விடுபட்டவர்களுக்கு ஆகஸ்ட் 19, 20-ல் சிறப்பு முகாம்கள்!

*சென்னை, ஆக.10-* பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார். விண்ணப்பப் பதிவு முகாம்களை இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 20,765 நியாய விலைக் கடைகளில் இருக்கும் குடும்ப அட்டைகளுக்கு 24.07.2023 முதல் 04.08.2023 வரை நடைபெற்ற விண்ணப்பப் பதிவு முகாமில் 88.34 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட முகாம்கள் 5.8.2023 அன்று தொடங்கி 16.8.2023 வரை நடைபெற்று வருகிறது. இந்த இரண்டாம் கட்ட முகாமில் இதுவரை 59.86 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த இரண்டு முகாம்களிலும் விண்ணப்பிக்க தவறியவர்கள் 19.8.2023 மற்றும் 20.8.2023 ஆகிய நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் விண்ணப்பிக்கு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் அளிக்கப்பட்ட தகவல்களை தேவையேற்படின் சரிபார்க்க களஆய்வு மேற்கொள்ளப்படும். அப்போது விண்ணப்பத்தாரர்கள் களஆய்விற்கு வரும் அலுவலர்களுக்கு உரிய தகவல்களை அளித்து தகுந்த ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், எப்போதும் வென்றான் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தினை திறந்து வைத்தார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திக்குளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்பு ராஜன், விளாத்திக்குளம் பேரூர்க் கழகச் செயலாளர் வேல்சாமி, ஒட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் ரமேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் வெள்ளைச்சாமி ஆகியோர் உடன் உள்ளனர்.



நேற்று (09.08.2023) செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டம் பேரூர் ஊராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கப்படவுள்ளதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.த.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர்இரா.கிர்லோஷ் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, திருப்போரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், ஆத்ம வேளாண்மை குழு தலைவர் பையனூர் சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.